

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 02.02.2020

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்







# தேசிய நிகழ்வுகள்

- **இந்திய கடலோரக் காவல்படையின் கிழக்கு பிராந்தியம் சார்பில் 43-வது கடலோரக் காவல் படை தினம் பிப்ரவரி 1** அன்று **கொண்டாடப்பட்டது.** இதில் **தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்** கலந்துகொண்டு **வாழ்த்துகளைத் தெரிவித்தார்.**
    - **செய்தி துளிகள் :**
        - கடற்படையிலிருந்து இந்திய கடலோரக் காவல் படை தனியாகக் கட்டமைக்கப்பட்டு பிப்ரவரி 1, 1977-ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியதை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் பிப்ரவரி 1 கடலோரக் காவல்படை தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

- நாட்டின் பொருளாதாரம், சரிவைச் சந்தித்துள்ள இந்தச் சூழலில், வரும் ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் தொடங்கும் 2020 - 2021-ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மக்களவையில் பிப்ரவரி 1 அன்று தாக்கல் செய்தார்.
    - வருமான வரி விதிப்பில் புதிய வழிமுறை, வரி விகிதம் குறைப்பு, வேளாண்துறைக்கு கூடுதல் நிதி, உள்கட்டமைப்பு, வளர்ச்சி ஊக்குவிப்பு, சுகாதாரத்துறை திட்டங்கள் ஆகிய அம்சங்கள் **மத்திய அரசின் பட்ஜெட்டில்** அறிவிக்கப்பட்டுள்ளன.

- **செய்தி துளிகள் :**
    - **வேளாண் துறைக்கு ரூ.1.60 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு** செய்யப்பட்டுள்ளது.
    - குறைந்த விலை வீட்டு கடன்களுக்கு செலுத்தப்படும் வட்டிக்கு ரூ.1.5 லட்சம் வரிச் சலுகை பெறுவதற்கான கால வரம்பு மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் பேட்ஸ்மேன்களில் இந்திய கேப்டன் விராட் கோலி தொடர்ந்து முதலிடத்தில்** நீடித்து வருகிறார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) சார்பில் தரவரிசைப் பட்டியல் பிப்ரவரி 1 அன்று (சனிக்கிழமை) வெளியிடப்பட்டது. இதில் பேட்டிங் தரவரிசையில் 928 புள்ளிகளுடன் கோலி முதலிடத்தை தக்க வைத்துள்ளார்.
    - ஆஸி. அதிரடி வீரர் ஸ்டீவ் ஸ்மித் அவரை விட 17 புள்ளிகள் பின் தங்கி இரண்டாவது இடத்தில் உள்ளார்.
    - 791 புள்ளிகளுடன் புஜாரா 6-ஆவது இடத்தில் உள்ள நிலையில், ரஹானே 9-ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.
    - **செய்தி துளிகள் :**
        - விராட் கோலி 2017 ஆம் ஆண்டு சோபர்ஸ் விருது.
        - 2012 ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் பன்னாட்டுத் துடுப்பாட்ட வீரர் விருது.
        - 2016மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சிறந்த வீரராக

விகடன் விருது பெற்றுள்ளார்

- **ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மகளிர்** ஒற்றையர் பிரிவில் முன்னாள் உலகின் நம்பர் ஒன் வீராங்கனையும், 2 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவருமான கார்பைன் முகுருஸாவை 4-6, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் வீழ்த்தி முதல் **கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றினார் அமெரிக்க இளம் வீராங்கனை சோபியா கெனின்**.
    - **செய்தி துளிகள் :**
        - கடந்த 2008-இல் மரியா ஷரபோவா 20 வயதில் பட்டம் வென்ற இளம் வீராங்கனை என்ற சிறப்பைப் பெற்றிருந்தார்.
        - அவருக்கு பின் தற்போது 21 வயது 80 நாள்களில் பட்டம் வென்ற இளம் வீராங்கனை என்ற சிறப்பை பெற்றார் சோபியா.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச ஈரநில தினம் பிப்ரவரி 2ம்** தேதியன்று கொண்டாடப்படுகிறது.
    - இந்த தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் உலகில் உள்ள ஈரநிலங்களை பாதுகாத்து, அவற்றை சுற்றாடலுக்கு ஏற்ற வகையில் பேணுவது மட்டுமன்றி அவற்றின் முக்கியத்துவத்தை மக்கள் அறிந்து கொள்வதற்காக

ஆகும்.

## திருக்குறள்

**குறள் எண் : 96**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : இனியவை கூறல்

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**

**நாடி இனிய சொலின்.**

**விளக்கம் :** நன்மையைத் தரும் சொற்களை ஆராய்ந்து ஒருவன் இனிமையாகச் சொல்வானானால் தீமைகள் கெட்டு அறம் வளரும்